හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance and Mass Media, Colombo 01, Sri Lanka

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General | දුරකථන / தொலைபேசி / Telephone | +94 11 2484729 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax | +94 11 2431498 | ඊ-මේල් / மின்-அஞ்சல் / E-mail: dgto@tod.treasury.gov.lk |
| මගේ අංකය / எனது இல / My Number. | TO/REV/1/05 | ඔබේ අංකය / உமது இல / Your Number | | | 2018.09. 14 |


திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 05/2018

அமைச்சின் செயலாளர்கள்/

திணைக்களத்தின் தலைவர்கள்/

மாவட்ட செயலாளர்கள் யாவருக்கும்

**திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக நடவடிக்கை மேற்கொள்கின்ற வருமான குறியீட்டின் கீழ் வருகின்ற வருமானங்களை திரட்டுதல், நிருவகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையை வைத்துக் கொள்ளுதல்.**

வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்கின்ற ஆனால் மேற்சொன்ன திணைக்களத்தினால் நேரடியாக திரட்டப்படாத அதேபோன்று ஏனைய அமைச்சுக்களுக்கு/ திணைக்களங்களுக்கு விஷேடமாக ஒப்படைக்க முடியாத பின்வரும் வரி அல்லாத வருமான குறியீட்டு இலக்கங்களின் கீழ் திரட்டப்படுகின்ற வருமானங்கள் சம்பந்தமாக இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றுதல் வேண்டும்.

| **குறியீட்டு இலக்கம்** | **விபரம்** |
|---|---|
| 20.02.01.99 | அரசாங்கத்தின் சொத்துக்களின் மூலம் கிடைக்கின்ற வருமானம் - வாடகை -ஏனைய வாடகைகள் |
| 20.02.02.99 | வட்டி - ஏனையவைகள் |
| 20.03.01.00 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - திணைக்கள ரீதியான விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - நிருவாக ரீதியான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள், நானாவித |
| 20.03.03.02 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - தண்டப்பணம் மற்றும் அரசுடமையாக்குதல், ஏனையவை |
| 20.03.99.00 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - வருமானங்கள், |
| 20.05.99.00 | ஏற்றங்களை உரிமை மாற்றுதல் - தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய உரிமை மாற்றுதல். |

01. அரசாங்க வருமானத்தை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையிடல் சம்பந்தமான வழிகாட்டியில் உள்ளடங்கியுள்ள அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இல் 4வது பகுதியில் (அ) முதல் (இ) வரையான பிரிவுகளுக்கு அமைவாக மேலே குறிப்பிட்ட வருமான தலைப்புகளில் வருமானங்களை திரட்டும் பொறுப்பு 2016.12.30 ஆம் திகதிய அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 (v) இன் மூலம் வருமானத்தை திரட்டுகின்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தங்கள் நிறுவனத்தினால் மேற்குறிப்பிட்ட குறியீட்டு இலக்கங்களின் கீழ் திரட்டப்படுகின்ற வருமானங்கள் சம்பந்தமாக பின்வருமாறு செயற்படுதல் வேண்டும்.

(அ) மேலே குறிப்பிட்ட வருமான குறியீட்டு இலக்கங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானங்களின் அளவு திரட்டப்பட்ட வருமானங்களின் அளவு மற்றும் நிலுவை வருமானம் ஏதும் இருப்பின் அந்த அளவையும் உடன்படிக்கையின் கீழ் அறவிடப்படுகின்ற வருமானங்கள் இருப்பின் அந்த உடன்படிக்கைக்கு அமைவாக கிடைக்க வேண்டிய திகதி மற்றும் உறுதியாக கிடைத்த திகதிகளையும் தெளிவாக காட்டக்கூடிய விதத்தில் முறையாக அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

(ஆ) நிலுவை வருமானங்களை அறவிடுவதனை பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒப்படைத்து அந்த நடவடிக்கைகளை உரிய காலத்தில் மேற்பார்வை செய்வதற்கும், அறவிடவேண்டிய நிலுவை வருமானத்தின் அளவு அதிகரிப்பதனை தடுப்பதற்கும் பொருத்தமான உள்ளக நிருவாக வேலைத்திட்டங்களை தயாரித்துத்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) திரட்டப்பட்ட வருமானங்களை சரியாக வகைப்படுத்தி உடனடியாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும். மேலும் திரட்டப்படுகின்ற வருமானங்களை தற்காலிகமாக திரட்டும் கணக்குகளில் அல்லது வைப்புக் கணக்குகளில் தடுத்து வைப்பதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டிய அதேவேளையில் வைப்புக் கணக்குகளில் அவ்வாறான வருமான நிதி உள்ளடக்கப்பட்டிருப்பின் அவற்றை சரியாக அடையாளம் கண்டு அந்தந்த குறியீட்டு இலக்கங்களின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ) நி.ஓ. 134(2) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வுக்காக நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிக்கும் போது வருமானத்தை வகைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், அறிக்கைகளை பேணுதல் மற்றும் மேலும் வருமான நிருவாகத்திற்காக உள்ளக நிருவாக முறையின் பரிசீலனைக்கு ஏற்ற விடயங்களை உள்ளடக்குதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைபடுத்தி சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்குதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைபடுத்தி சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை முகாமைத்துவக் கணக்காய்வு குழுக் கூட்டங்களில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

02. மேலே குறிப்பிட்ட வருமான குறியீட்டு இலக்கங்களின் கீழ் வருமானத்தை திரட்டும் போது சகல அமைச்சுக்களின்/ திணைக்களங்களின் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களினால் நி.ஓ.142 (1)-(4) மற்றும் பிரதேச செயலகங்கள் சமபந்தமாக நி.ஓ.149 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. நி.ஓ. 85(1),(2) இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட வருமான குறியீடுகளுக்காக வருமானத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகளை முடியுமான வரையில் சரியாக தயாரித்தல் வேண்டும். மேற்சொன்ன வருமான மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற வருமான மதிப்பீட்டை தயாரிப்பதற்காக சுற்றறிக்கை அறிவுரைகளின்படி தயாரித்து குறிக்கப்படுகின்ற தினத்திற்கு முன்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. நி.ஒ 128(2) (ஈ) இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட வருமான குறியீடுகளுக்கு உரிய நிலுவை வருமானங்கள் இருப்பின் அரையாண்டு நிலுவை வருமானம் சம்பந்தமான அறிக்கை, திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளின் பிரகாரம் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். மேற்சொன்ன அரையாண்டு நிலுவை வருமானம் பற்றிய தகவல்களை முதல் 06 மாதங்களுக்கும் இரண்டாவது 06 மாதங்களுக்காக வெவ்வேறாக கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியபடியினால் சுற்றறிக்கையின் அறிவுரைகளின் மூலம் அறிவிக்கப்படுகின்ற திகதிகளுக்கு முன்னர் தவறாமல் சமர்ப்பிப்பது அத்தியாவசியமானதாகும். நிலுவை வருமானங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் வெற்று அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. நி.ஒ 128(2)(எ) இன் பிரகாரம் தங்களது நிறுவனத்தில் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு உரிய சுற்றறிக்கையின் அல்லது அறிவுரையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட வருமான குறியீட்டு இலக்கங்களின் கீழ் திரட்டப்படுகின்ற கட்டணங்கள் அல்லது வருமானங்களை (உதாரணம்: கொடுப்பனவு பத்திரக் கட்டணம், சேவைக் கட்டணம் போன்ற விஷேடமாக மாவட்டச் செயலாளகங்களினால் திரட்டப்படுகின்ற வருமானம்) அந்த நிறுவனங்களுடன் கூட்டிணைந்து காலத்திற்கு ஏற்ற விதத்தில் பொருளாதார மற்றும் ஏனைய நிலைமைகளின் மாற்றங்களையும் கவனத்திற் கொண்டு, காலத்திற்கு காலம் அந்த கட்டணங்களை/ வருமானங்களை மீளாய்வு செய்து அவற்றை திருத்துவதற்காக அரச நிதி திணைக்களத்திற்கு அறிக்கை இடுதல் வேண்டும். இதற்காக “அரசாங்க நிறுவனங்களினால் சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற கட்டணம” எனும் தலைப்பில் கட்டண திருத்தத்திற்கு உரியதாக அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2018.01.17 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 01/2018 இன் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

06. நி.ஒ. 151 இன் பிரகாரம் அரசாங்க வருமான கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட வருமானக் குறியீட்டு இலக்கங்களுக்குரிய மாதாந்த வருமானத்திலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வது பற்றிய விபரங்களை இந்த சுற்றறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள TO/REV/REFUND/01 மாதிரிக்கு அமைவாக பூர்த்தி செய்து அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் இந்த திணைக்களத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்

07. மேலும் மேற்குறிப்பிட்ட வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் வருமானம் திரட்டப்படுகின்ற அமைச்சுக்களுக்கு/ திணைக்களங்களுக்கு கீழே காணப்படுகின்ற உப அலுவலகங்கள் இருக்குமாயின், அந்த உப கணக்கு அலகுகளுக்கும் வருமானத்தை திரட்டுதல் மற்றும் நிருவகித்தல் அறிக்கைகளை வைத்துக்கொள்ளுதல் மற்றும் உள்ளக நிருவாகம் சம்பந்தமான எழுத்து மூலமான அறிவுரைகளை தேவையான விதத்தில் வெளியிட்டு மிக நெருக்கமாக மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

08. மேலே குறிப்பிடப்பட்ட வருமானத் தலைப்புகளுக்குரிய வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தும் போது நி.ஒ. 118 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும், பிழையாக கணக்கு வைக்கப்பட்டுள்ள வருமானங்களை சரியாக கணக்கு வைக்கும் போது நி.ஒ. 460 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும், இதன் மூலம் வலியுறுத்துகிறேன். அதேபோன்று பிழைதிருத்தங்களை முடியுமான வரையில் குறைத்துக் கொள்வதற்காக திரட்டப்படும் வருமானங்களை சரியான வருமானத் தலைப்பின் கீழ் மாத்திரம் கணக்கு வைப்பது திரட்டுவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

09. இந்த சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள அறிவுரைகளின்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மேலே காட்டப்பட்டுள்ள வரியல்லாத வருமான தலைப்பின் கீழ் திரட்டப்படுகின்ற வருமானங்களையும், வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துவதனை கணக்கு வைத்தல் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற கணக்காய்வு விசாரணைகளைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

சீ.ஜே.கே. பெரேரா
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

பிரதி:- 1. கணக்காய்வாளர் அதிபதி
2. அரச நிதிப் பணிப்பாளர் நாயகம்

மாதிரிப் படிவ இல. - TO/REV/REFUND/01

அமைச்சு/திணைக்களம்/மாவட்டச் செயலகம் : ……………………………………………………………….

செலவு விடய இலக்கம்……………………………… ஆண்டு: …………….. மாதம் : …………………

*மீள்கொடுப்பனவு செய்யப்பட்ட வருமானக் குறியீட்டு இலக்கம். : ………………………………………

| வருமானத்திற்கு ‘பற்று’வைக்கப்பட்ட பெறுமதி<br><br>ரூபா | வருமானத்திற்கு ‘பற்று’வைப்பதற்கான காரணங்கள் | குறுக்குக் குறிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தமாயின், திருத்தம் மேற்கொள்ளப்பட்ட (வரவுக் குறிப்பு பயன்படுத்தப்பட்ட) வருமானக் குறியீட்டு இலக்கம் அல்லது தொடர்புடைய கணக்குக் குறியீட்டு இலக்கம் | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் அனுமதியின் அடிப்படையில் பணத்தின் மூலம் செய்யப்பட்ட மீள்கொடுப்பனவாயின் கொடுப்பனவு செய்யப்பட்ட நபரின் பெயர் அல்லது நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

*(வருமானக் குறியீட்டு இலக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில்இருப்பின் மாத்திரம் தனித் தனியாக மாதிரிப் படிவங்களைத் தயாரிக்கவும்.)

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவை என சான்றுப்படுத்துகிறேன்.

…………………………………………….

பிரதான கணக்காளர் பணிப்பாளர் (நிதி)

திகதி :

தொலைபேசி இலக்கம் :

உத்தியோக இலச்சினை மற்றும் முகவரி :